

நாமக்கல் நகராட்சி, பழைய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம் கோட்டம்) சார்பில் புதிய வழித்தடம் மற்றும் நீட்டிப்பு செய்யப்பட்ட வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் சேவை துவக்க விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு புதிய வழித்தடம் மற்றும் நீட்டிப்பு செய்யப்பட்ட வழித்தடத்தில் நகரப் பேருந்துகள் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), மாநகராட்சி மேயர் து.கலாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், கழகப் பொதுக்குழு உறுப்பினர் டாக்டர் இரா.மாயவன், துணை மேயர் செ.பூபதி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கோட்ட மேலாளர் ப.செங்கோட்டுவேலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் அ.யுவராஜ் தலைமையில் ஒசூர் தளி சாலை ஆனந்த் கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது.கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் வரவேற்புரை ஆற்றினார். கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டு மார்ச் 1ம் தேதி கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் அன்று மாவட்ட முழுவதும் சுவர் விளம்பரம் எழுதி , மாநகர ஒன்றிய பேரூர் கழகங்களில் உள்ள கிளைகளில் இருவண்ணக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன், மாநகர மேயர் சத்யா, மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!



நாமக்கல், பிப். 25 -

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று (25.02.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 06.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமை தாங்குகிறார். தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி, நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 01.03.2025 அன்று கழக தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளினை சிறப்பாக கொண்டாடுவது குறித்து.

கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### அன்னைத் தமிழைக் காக்க – ஆதிக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து – இன்று

# மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தி.மு.க. மாணவர் அணி சார்பில் பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**சென்னை, பிப்.25–**

**அன்னைத் தமிழைக் காக்க, ஆதிக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று, மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (Federation of Students Organisation – Tamil Nadu) மற்றும் தி.மு.க. மாணவர் அணி சார்பில், பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் கல்வி கட்டமைப்பைச் சிதைக்கும் உள்நோக்கத்துடனும், ஆதக்க இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, கடந்த 21.02.2025 அன்று நடைபெற்ற மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலும், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலும் முதற்கட்டப் போராட்டமாக, மொழிப் போருக்கு வித்திடும் வகையில் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, இன்று (25.02.2025) தமிழ்நாடு மற்றும் புதுவை உள்ளிட்ட ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் உள்ள முக்கிய நகரங்களில் “பேரணியுடன் கூடிய மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற உள்ளது.

தாய் மொழியாம் தமிழ் மொழியைக் காக்கின்ற வகையில், நமது கண்டனத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு உணர்த்தும் வகையிலும், ஒன்றிய அரசைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் அலுவலகங்களின் முன்பு பேரணியுடன் கூடிய ஆர்ப்பாட்டத்தை, மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்புதமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகளுடன் கலந்துபேசி ஒருங்கிணைந்து, மாணவர் அணியின் நிர்வாகிகள், தமிழ் மாணவர் மன்ற நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர்களுடன் பெருந்திரளாக பேரணி சென்று ஆர்ப்பாட்டத்தை மாபெரும் எழுச்சியாக நடத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கழக மாவட்டத்தில் உள்ள கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகளோ, மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு - தமிழ்நாடு (FSOTN) கூட்டமைப்பில் உள்ள மாணவர் அமைப்புகளின் மாநில நிர்வாகிகளையோ சிறப்பு அழைப்பாளர்களாக அழைத்து, கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிறப்புரையாற்றுகிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஆர்ப்பாட்டத்தின் போது, சர்வாதிகாரப் போக்கோடு செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு நிதி தராமல் கல்வியைச் சிதைக்கின்ற படுபாதகச் செயலில் ஈடுபட்டு வருவதையும், தொன்மை வாய்ந்த நம் தமிழ்மொழியை அழிக்க வேண்டுமென்ற பா.ஜ.க.வின் தீய நோக்கத்தை பொதுமக்களிடம் எடுத்துரைக்கும் வகையிலும், யு.ஜி.சி. வரைவுக் கொள்கையைத் திரும்பப் பெற வலியுறுத்தியும், மும்மொழிக் கொள்கையைத் திணிக்கும் தேசியக் கல்விக் கொள்கையைத் திரும்பப் பெற வலியுறுத்தியும் முழக்கங்களை எழுப்பி, ஆர்ப்பாட்டத்தை மிக எழுச்சியுடன் நடத்திட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### நாமக்கல் புறவழிச்சாலை திட்டம்

# விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும்!

## கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், பிப். 25 -

நாமக்கல் மாநகராட்சி, பழைய பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம் கோட்டம்) சார்பில் புதிய வழித்தடம் மற்றும் நீட்டிப்பு செய்யப்பட்ட வழித்தடத்தில் நகரப்பேருந்துகள் சேவை துவக்க விழா நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம் (நாமக்கல்), கு. பொன்னு சாமி (சேந்தமங்கலம்), மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் கலந்து கொண்டு புதிய வழித்தடம் மற்றும் நீட்டிப்பு செய்யப்பட்ட வழித்தடத்தில் நகரப்பேருந்துகள் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்து பேசும் போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சாதாரண கட்டண பேருந்துகளில் மகளிர் விடியல் பயணத்திட்டம் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் நாமக்கலில் காலை 8.40 மணிக்கு புறப்பட்டு போடிநாயக்கன்பட்டி, சிவநா யக்கன்பட்டி வழியாக பழைய பாளையம் பள்ளி வரை மாற்றி அமைக்கப்பட்ட வழித்தடத்திலும், நாமக்கலில் மதியம் 2.30 மணிக்கு புறப்பட்டு க்ரீன் பார்க் பள்ளி, கருப்பட்டிபாளையம், தும்மங்குறிச்சி வழியாக திண்டமங்கலம் வரை புதிய வழித்தடத்திலும், பெரியமணலியில் இரவு தங்கல் செய்யப்பட்டதை மாற்றி, நாமக்கல் வரையிலும் மற்றும் நாமக்கலில் காலை 6.05 மணிக்கு புறப்பட்டு பெரியமணலி வரையிலும் நீட்டிப்புட் செய்யப்பட்ட வழிதடத்திலும், நாமக்கலில் மதியம் 1.10 மணிக்கு புறப்பட்டு புதன் சந்தை வழியாக காரைக்குறிச்சி வரை கூடுதல் நடைகள் இயக்கப்படும் மற்றும் இரவு தங்கல் செய்யப்பட்டதை முட்டாஞ்செட்டி வரை நீட்டிப்பு செய்யப்பட்ட வழித்தடம் உள்ளிட்ட புதிய மற்றும் நீட்டிப்பு செய்யப்பட்ட வழித்தடத்தில் பேருந்து சேவை வழங்கப்படும். இதனை பள்ளி மாணவச் செல்வங்கள், பொதுமக்கள் மற்றும் மகளிர் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

மேலும், நாமக்கல் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புறவழிச்சாலை திட்டம் நான்கு கட்டங்களாக செயல்படுத்தப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து, முதலைப்பட்டி பேருந்து நிலையத்தில் தொடங்கி துறையூர் சாலை, மோகனூர் சாலை, சேந்தமங்கலம் மற்றும் திருச்சி சாலைகளை இணைக்கும் வகையில் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. தொடர்ந்து, இரண்டாம் கட்டத்தில் மருதப்பட்டியில் இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்காக இரயில்வே வாரியத்திடம் திட்ட மற்றும் வடிவமைப்பு அனுமதி பெற்று ரூ.60 கோடி செலவில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி செயல்படுத்த உள்ளது என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், கழகப் பொதுக்குழு உறுப்பினர் டாக்டர் இரா.மாயவன், துணை மேயர் செ.பூபதி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கோட்ட மேலாளர் ப.செங்கோட்டுவேலன், நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், ஒன்றிய கழகச் செயலாளர்கள் பழனிவேல், பாலசுப்பிரமணியம், ஜெயபிரகாஷ், தலைமைக் கழக பேச்சாளர் ராஜகோபால் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை திருவப்பூர் முத்துமாரியம்மன் திருக்கோயில் பூச்சொரிதலை முன்னிட்டு நேற்று (24.02.2025) நடைபெற்ற பூப்பிரித்தல் நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, கலந்துகொண்டார். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா. ஐஸ்வர்யா, உதவி ஆணையர் (இந்து சமய அறநிலையத்துறை) வே.சுரேஷ், செயல் அலுவலர் (திருக்கோயில்கள்) முத்துராமன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில்

# இந்தி எழுத்தை தார்பூசி அழித்து தி.மு.க.வினர் போராட்டம்!

## மும்மொழிக் கொள்கைக்கு எதிர்ப்பு வலுக்கிறது!

பொள்ளாச்சி, பிப். 24 -

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு தமிழகம் முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பி வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் பொள்ளாச்சி ரெயில் நிலைய பலகையில் இருந்த இந்தி எழுத்தை தி.மு.க.வினர் தார்பூசி அழித்தனர்.

மும்மொழிக் கொள்கையை தமிழ்நாட்டில் மல்படுத்த ஒன்றிய அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் இருமொழிக் கொள்கையே தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டவட்டமாக கூறி விட்டார்.

இந்நிலையில் மும்மொழிக் கொள்கையை திணிப்பதில் மத்திய அரசு முழுமையாக ஈடுபட்டு வருவதை எதிர்த்து பல்வேறு போராட்டங்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் கண்டன பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. இதில் கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

மேலும் தமிழ்நாட்டில் முழுவதும் வீடுகளுக்கு முன் இந்தி எதிர்ப்பு வாசகம் மற்றும் ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கைக்கு எதிராக கோலமிட்டு பெண்கள் தங்கள் எதிர்ப்பை காட்டி வருகின்றனர். நாளுக்கு நாள் இந்த விவகாரம் விஸ்வ ரூபம் எடுத்து வருகிறது.

இந்நிலையில் கோவை மாவட்டம், பொள்ளாச்சி ரெயில் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பெயர் பலகையில் இந்தி எழுத்தை தி.மு.க.வினர் தார்பூசி அழித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தி.மு.க. சட்டத்திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், நகர் மன்ற உறுப்பினர் செந்தில் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல், முன்னாள் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் அவினாஷ் கார்த்திக், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பைக் பாபு, ஸ்ரீரங்கன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

ஒன்றிய அரசின் இந்தி திணிப்புக்கு எதிராகவும், மும்மொழிக் கொள்கைக்கு எதிராகவும் முழக்கமிட்டனர்.

### பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

# பல்லாவரம் வடக்குப் பகுதி கழக செயற்குழுக் கூட்டம்!

## தீர்மானங்களை விளக்கி – பகுதிக் கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை அறிக்கை!

பல்லாவரம், பிப். 25 -

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கட்டளையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் 23.2.2025 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணி அளவில் ச.சிவக்குமார் தலைமையில் பகுதி கழக நிர்வாகிகள் வ.முத்து, எஸ்.நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி கலந்து கொண்டு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை மார்ச் 1 முதல் எவ்வாறு பகுதி முழுவதும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடுவது என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகர பிரதிநிதிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், வட்ட அணிகளின் செயலாளர்கள், நிர்வாகிகள், தேர்தல் முகவர்கள், பி.எல்.ஏ.2 தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை குறித்து பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை பேசியது வருமாறு:-

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைப்படி பகுதி முழுவதும் எவ்வாறு மார்ச் -1 முதல் நமது தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள் வருமாறு:-

வருகிற மார்ச்-1 அன்று பிறந்தநாள் காணும் கழகத் தலைவர் தன் உழைப்பால் நாம் தாய் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உயர்த்துவதற்கும் தமிழ்நாடு மக்கள் சமூகத்திலும் பொருளாதாரத்தை உயர்ந்த நிலை அடைவதற்கும் பாடுபடும் திராவிட மாடல் முதல்வர் தமிழ்நாடு முதலமைச்சர் அன்பு தளபதி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பல்லாவரம் வடக்கு பகுதி கழகத்துக்கு உட்பட்ட அனைத்து வட்டங்களிலும் கழகக் கொடியேற்றி ஒளியும் ஒலிய அமைத்து பொது மக்கள் இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கியும் நல திட்ட உதவிகள் செய்தும் அனைத்து வட்டங்களிலும் தலைவர் அவர்களின் பிறந்தநாளை மிக வும் எழுச்சியுடன் கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.



திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், முக்குளம் சாத்தனூர் ஊராட்சியில், கருவாக்குறிச்சி கிராமத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் கட்டப்படவுள்ள புதிய கிராம அறிவு மையம் கட்டடம் கட்டுவதற்கு தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா அடிக்கல் நாட்டினார்.மாவட்ட செயலாளர்,சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் ,தாட்கோ தலைவர் முன்னால் அமைச்சர் உ.மதிவாணன், , மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் மற்றும் கழக ஒன்றிய செயலாளர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தே. பொன்னுசாமி

**பிப்ரவரி 25 (1986)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டம் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முசிறி வட்டம், விவசாய கூட்டுறவு வங்கி தலைவராகவும், குணசீலம் ஊராட்சித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**